IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W. 1)**

Solemnly affirmed and sworn by Tmt.K.Sailaja Grade III Bench clerk on 21.01.2025. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 199/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வக்குமார் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

தாவா சொத்திற்குரிய கணினி சிட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**22.02.2019ம் தேதியிட்ட கணினி சிட்டா வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்டு ஆவணத்தின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**20.11.2021ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1, 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணங்களை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**01.06.2022ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகவும், 27.06.2022ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்**

**சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

1, 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் 7ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**30.06.2022ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1, 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**02.07.2022ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்குரிய கணினி சிட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பட்டா எண்.4004க்குரிய கணினி சிட்டா வா.சா.ஆ. 7 ஆகவும், பட்டா எண்.4132ற்குரிய கணினி சிட்டா வா.சா.ஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.**)

பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**12.06.2023ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

வழக்கறிஞர் அறிவிப்பை 5 முதல் 7 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (3 எண்ணம்) வா.சா.ஆ. 10 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

3ம் பிரதிவாதிக்கு சார்பு செய்யப்படாமல் திரும்பி வந்த அஞ்சல் உறையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**திருப்பப்பட்ட அஞ்சல் உறை வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)